தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை : 100/= இதழ் 108 04.05.2025


# பெறுமதிசேர் வரிச்சட்டத்தில் திருத்தங்கள்



- மஞ்சளின் மகிமை!
- சதொச பொருட் கொள்வனவு எமக்கு இன்னும் எட்டாக்கனி - பட்டிருப்பு மக்களின் எதிர்பார்ப்பு
- வீட்டுத் தோட்டத்தை பாதுகாப்பது எப்படி? – வழிகாட்டும் தமிழர் பொருண்மியம்
- பார்வை
- முன்னோர்கள் எல்லோரும் முட்டாள்கள் இல்லை

# மஞ்சளின் மகிமை...

மஞ்சளை உடலில் பூசிக்
குளிப்பதன் மூலம்
உடல் பொன்னிறம் பெறும்;
கெட்ட வாடை நீங்கும்;
வசீகரமான தோற்றம் உண்டாகும்;
வாந்தி, வாய்வு, சூடு, திருஷ்டி
தோஷம், தலைவலி, நீர்
கோத்தல், மூக்கில் நீர்வடிதல்,
வீக்கம், வண்டுகடி, புண்
ஆகியவை நீங்கும் தன்மை இந்த
மஞ்சளுக்கு உண்டு
என்று மருத்துவ குணங்களை
அகத்தியர் விரிவாகவே
சொல்லி இருக்கிறார்.





மஞ்சள் நம்முடைய கலாசாரத்திலும், பாரம்பரிய மருத்துவத்திலும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மஞ்சள், உணவில் சுவை கூட்டவும், மற்றும் நிறத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு சித்தர்கள் சித்த மருத்துவத்தில் முக்கிய பொருளாக இதைப் பயன்படுத்தியுள்ளார்கள். மஞ்சள் என்பது மிகப்பெரிய கிருமிநாசினி. அதனால் தான் அது ஒரு மிகச் சிறந்த மருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மஞ்சளை 'ஏழைகளின் குங்குமப்பூ' என்பார்கள். விலை உயர்ந்த குங்குமப்பூ தரும் பலன்களைக் குறைந்த விலையில் கிடைக்கும் மஞ்சள் தருகிறது. எந்த ஒரு நல்ல காரியமும் மஞ்சளுடன் தான் தொடங்கும். எல்லா சுபகாரியங்களிலும் முதலில் முழுமுதற் கடவுளாக வணங்கப்பெறும் விநாயகப் பெருமானை மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து பூஜிக்கிறோம்.

மங்களகரமான பொருள் மஞ்சள் என்பதால், எல்லாவிதமான சுபமுகூர்த்தங்களுக்கும் மஞ்சள் உபயோகப்படுகிறது. மஞ்சளின் புனித தன்மையால், அவற்றை திருமணத்தில் கட்டப்படும், மங்கள நாண் எனப்படும் 'தாலிக் கயிறில்' பூசப்படுகிறது.

மஞ்சள் செடியை வீட்டில் வளர்ப்பது மிகவும் விசேஷம். மஞ்சளில் ஸ்ரீ லட்சுமி வாசம் செய்கிறாள். அறுவடை திருநாளான பொங்கல் பண்டிகையின் போது, பொங்கல் பானையில், மஞ்சள் செடி மங்கல அடையாளமாக கட்டப்படுகிறது.

## அகத்தியரும் மஞ்சளும்:



அகத்தியரின் 'அகத்தியர் குண பாடம்' என்ற நூலில் மஞ்சள் மருத்துவ குணங்களை பற்றி பின்வரும் பாடலில் எழுதியுள்ளார்.

'பொன்னிறமாம் மேனி புலானாற்ற மும்போகும்
மன்னு புருட வசியமாம் பின்னியெழும்
வாந்திபித்த தோடமையம் வாதம் போற்
தீ பனமாங்
கூர்ந்தமஞ்சளின் கிழங்குக்கு
தலைவலிநீ ரேற்றஞ் சளையா மேகம்
உலைவுதரும் பீநசத்தி னுமே வலிசுரப்பு
விஞ்சு கடிவிட மும் வீறுவிர ணங்களும் போம்
மஞ்சள் கிழங்குக்கு மால்
மஞ்சட் குளிதனக்கு மாறாத்துர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலுந்
கொஞ்சலுறும்
ஐய மொழியு மடர்வியர்வுங் காணாது
வைய மதனில் வழுத்து
நீர்க்கடுப்பு காசமொடு நீடு விடாசுரமுந்
தீர்க்க நமைச்சல் வெப்புஞ் சேர்மலமும்
பார்க்குண்மிக
அஞ்சியே யேகுமஞ்ச ளாம்வத்தி ரம்புனைந்தால்
வஞ்சியே நன்றாய் வழுத்து'

**பொருள்:** மஞ்சளை உடலில் பூசிக் குளிப்பதன் மூலம் உடல் பொன்னிறம் பெறும்; கெட்ட வாடை நீங்கும்; வசீகரமான தோற்றம் உண்டாகும்; வாந்தி, வாய்வு, சூடு, திருஷ்டி தோஷம், தலைவலி, நீர் கோத்தல், மூக்கில் நீர்வடிதல், வீக்கம், வண்டுகடி, புண் ஆகியவை நீங்கும் தன்மை இந்த மஞ்சளுக்கு உண்டு என்று மருத்துவ குணங்களை அகத்தியர் விரிவாகவே சொல்லி இருக்கிறார்.

மஞ்சள் ஒரு வெப்ப மண்டலப்பயிர் ஆகும். தண்டில் உள்ள முளையிலிருந்து வளர்ந்து, மண்ணுக்குள் செல்லும் நீண்ட தொகுதி தான் மஞ்சள் கிழங்கு.

மஞ்சள் ஆசியாவில் பல இடங்களில் பயிரிடப்பட்டுகிறது. குறிப்பாக தென்னிந்தியாவில் அதிக அளவாக உற்பத்தி உள்ளது.

மஞ்சளைப் பொறுத்தவரை இருபதுக்கும் அதிகமான இனங்கள் உள்ளன.

நமக்கு ஏற்ற இனத்தினை தெரிவுசெய்து வைகாசி முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் நடவேண்டும்.



நல்ல வடிகால் வசதியுடைய செம்மண் மற்றும் இருவாட்டி மண். மஞ்சள் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது.

முதலில் நிலத்தை களை இல்லாமல் குறுக்கு-நெடுக்காக இரண்டு முறை உழ வேண்டும்.

கடைசி உழவின் போது ஏக்கருக்கு 6 - 10 டன் மக்கிய தொழு உரம் / கொம்போஸ் பசளை இட்டு மண்ணுடன் கலந்து உழவு செய்ய வேண்டும்.

பின்பு நான்கு அடி அகலத்துக்கு மேட்டுப்பாத்தி அமைக்க வேண்டும். பாத்தியின் நீளத்தை இடத்துக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம்.

ஒரு ஏக்கருக்கு 650 - 750 கிலோ விதை கிழங்குகள் தேவைப்படுகின்றன.

பஞ்சகவ்யம் – 2 லீட்டர், அங்கீகரிக்கப்பட்ட சூடோமோனஸ் – 1 கிலோ, தண்ணீர் – 100 லீட்டர் இவற்றை நன்கு கலந்து விதை மஞ்சளை 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்னர் நடலாம். இவ்வாறு செய்தால் முளைப்புத் திறன் அதிகரிக்கும். பூச்சி மற்றும் பூஞ்சணத் தாக்குதல் வெகுவாகக் கட்டுப்படும்.

ஏற்கனவே மஞ்சள் பயிர் செய்த நிலத்தில் மீண்டும் மஞ்சள் விதைகளை பயிரிடக்கூடாது. அவ்வாறு பயிரிட்டால் விதைகள் நூற்புழு தாக்கத்திற்கு (Nematodes) உள்ளாகி பயிர்களின் வளர்ச்சி தடைப்படுவதுடன் விளைச்சலும் குறையும்.

அதேபோல் நூற்புழு தாக்கத்தை அதிகரிக்கும் வாழை, மிளகாய், தக்காளி, கத்தரிக்காய் ஆகியவற்றை பயிரிட்ட நிலத்திலும் மஞ்சளை பயிரிடக்கூடாது. மஞ்சள் பயிர் செய்கைக்கு பயிர் சுழற்சி செய்வது மிகவும் அவசியம். எனவே மஞ்சள் பயிரிட்ட நிலத்தில் ஒரு வருடத்திற்கு மாற்றுப் பயிர் செய்கை செய்த பின்பு மஞ்சளை பயிரிடலாம்.

நடும் பொழுது 20 சென்டிமீட்டர் இடைவெளியில் 4 சென்டிமீட்டர் ஆழத்தில் நடவேண்டும்.

நடுவதற்கு முன்பும், நட்டு மூன்றாம்நாளின் பின்பும் பயிர் சிறிது வளரும் வரை உயிர்த் தண்ணீர் (Liquid Fertilizer) பாய்ச்சவேண்டும்.

பின்பு மண்ணின் தன்மைக்கு ஏற்றாற் போல் 7 நாட்களில் ஒரு தடவை வீதம் நீர் பாய்ச்சவேண்டும்

நட்டு 30வது நாளில் முதல் களையும், பின் 50, 120 மற்றும் 150 நாட்களிலும் களை எடுக்கவேண்டும்.

மேலுரம் இடும்போது மண் அணைக்க வேண்டும்.



எந்த ஒரு ரசாயனமும் பயன்படுத்தாமல் முற்றுமுழுதாக இயற்கையாகவே உற்பத்தி செய்து அறுவடை செய்ய முடியும்.

பயிர் வளர்ப்பு ஊக்கியான பஞ்சகவ்யா, ஜீவாமிர்தத்தையும்.

இயற்கை முறையிலான கிருமிநாசினி களையும் பயன்படுத்தலாம்.



இனத்தைப் பொறுத்து 7 - 9 மாதங்களில் மஞ்சள் அறுவடைக்குத் தயாராகும்.

பயிர் மஞ்சள் நிறமாக மாறுதல், சாய்தல், உலர்ந்துவிடுதல் போன்றவை அறுவடைக்கான அறிகுறியாகும். கிழங்குகளை மண்வெட்டி அல்லது குழிதோண்டும் கருவி கொண்டு தோண்டி எடுக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு பதப்படுத்தப்படாத கிழங்குகள் 10 -12 டன் கிடைக்கும். பதப்படுத்தப்பட்ட கிழங்குகள் 3-4 டன் வரை கிடைக்கும்.



கிழங்குகளை சுத்தமான நீரில் வேக வைக்க வேண்டும். கிழங்குகளைச் சரியான அளவு வேகவைக்கவேண்டும். அதிகமாக வேகவைத்தால் நிறம் மங்கிவிடும். குறைவாக வேக வைத்தால் கிழங்குகள் காயும் போது நொறுங்கி உடைந்து விடும்.

நீர் கொதிக்க ஆரம்பித்த பின்னர் சில குறிப்புகள் மூலம் கண்டறிலாம்.

1. நல்ல மஞ்சள் வாசனை வீசும்.
2. நீர் கொதிக்கும் போது நுரை தள்ளும்.
3. கிழங்கினை இலேசாக அழுத்தும்போது நெகிழ்ந்து கொடுக்கும்.
4. அவிந்த கிழங்கினுள் சிறு குச்சியினை நுழைத்தால் அது எளிதில் உள்ளே செல்லும்.
5 மஞ்சளை உடைத்துப் பார்த்தால் உட்பாகம் செம்மஞ்சள் நிறம் மாறி. மஞ்சள் நிறமாக இருக்கும்.

இந்த சமயத்தில் கிழங்குகளை எடுத்து ஆறவிடவேண்டும்.

பின்பு வெயிலில் காய வைக்கவேண்டும். மழையில் நனைய விடக்கூடாது. ஒவ்வொரு நாளும் மூன்று அல்லது நான்கு முறை கிளறி விட்டு சீராக காயவிடவேண்டும். தினமும் மாலையில் கிழங்குகளை ஒன்றாகக் குவித்து மூடிவிடவேண்டும்.

சுமார் 10 நாட்களில் மஞ்சள் காய்ந்துவிடும். கிழங்குகள் உறுதியாக மாறிவிடும்.

மஞ்சளில் இருக்கும் (Curcu min)என்ற அளவை கொண்டு மஞ்சளின் தரம் பிரிக்கபடுகிறது

. மேலும் இதனை நாம் சமையலில் Turmeric powder மற்றும் Turmeric paste ஆக பயன்படுத்துகிறோம்.

விதை மஞ்சள் பெறுவதற்கு மஞ்சள் கிழங்கில் இருந்து வரும் துணைக் கிழங்குகளை (விரலி)

விதையாக பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு முறையும் மஞ்சளை அறுவடை செய்தபின்பு கிடைக்கும் விதைகளை பூச்சி, பூஞ்சணம் தாக்காதவாறு நேர்த்தியான முறையில் சுத்திகரிக்க வேண்டும். இதனால் விதைகளை ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும்.

அறுவடை செய்தவுடன் விதை நேர்த்தி செய்ய 600-800 கிலோ விதை மஞ்சளுக்கு பஞ்சகவ்யயா 2 – 5 லிட்டர், சூடோமோனஸ்– 1- 2 கிலோ, தண்ணீர் தேவையான அளவு எடுத்து இவற்றை நன்கு கலக்கி விதை மஞ்சள் விதைகள் நன்கு மூழ்குமாறு 20 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்னர் விதை நேர்த்தி செய்த மஞ்சளை நிழலில் உலர வைத்து பின்னர் பாதுகாப்பான இடத்தில் வெப்பம் மற்றும் தண்ணீர் புகா வண்ணம் சேமிக்க வேண்டும். மஞ்சள் நடமுன்பாக மற்றுமொருமுறை விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

நடமுன்னர் பஞ்சகவ்யா – 2 லிட்டர், சூடோமோனஸ் – 1 கிலோ, தண்ணீர் – 100 லிட்டர் இவற்றை நன்கு கலந்து விதை மஞ்களை 20 நிமிடம் ஊற வைத்து பின்னர் நடலாம். இவ்வாறு செய்தால் முளைப்புத் திறன் அதிகரிக்கும். பூச்சி, பூஞ்சணத் தாக்குதல் வெகுவாகக் கட்டுப்படும். ஆரோக்கியமான விதைகள் மூலம் மகத்தான விளைச்சல் கிடைக்கும்.

## மஞ்சளின் மருத்துவ பயன்கள்:

மஞ்சளில் வாலட்டைல் எண்ணெய் என்ற திரவம் இருக்கிறது. அதிலுள்ள குர்குமின் என்ற நிறமிதான் இதற்கான காரணம். இந்த குர்குமின் ஆக்சிஜனேற்ற அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதிலும், நோய் எதிர்ப்பு மண்டலத்தைச் சீரமைப்பதிலும் சிறந்து செயல்படுகிறது.

நம் உடலை நோயிலிருந்து காக்கும் திறன் மஞ்சளுக்கு உண்டு. மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது; தொற்று ஏற்படாமல் தடுக்கும் மாபெரும் சக்தி மஞ்சளுக்கு உண்டு.

மஞ்சள் கிழங்குகள் கார்ப்புஇ கைப்புச் சுவைகளும்இ வெப்பத் தன்மையும் கொண்டவை. கல்லீரலைப் பலப்படுத்தும்; பசியை அதிகமாக்கும்; காய்ச்சலைத் தணிக்கும்; குடல் வாயுவை அகற்றும்; தாதுக்களைப் பலப்படுத்தும்; வீக்கம்இ கட்டி ஆகியவற்றை கரைக்கும். உடலில் ஏதாவது பாகங்களில் வீக்கம் ஏற்பட்டால் மஞ்சள் தூளையும், வெங்காயத்தையும் சேர்த்து நன்றாக அரைத்து வீக்கத்தில் தடவினால் குணமாகிவிடும்.

மஞ்சள் தூளுடன்இ எலுமிச்சை சாறு கலந்து அம்மை நோயினால் ஏற்பட்ட தழும்புகளில் தடவினால் மறைந்துவிடும்.

காய்ச்சிய நீரில் மஞ்சள்தூளைப் போட்டு வாய் கொப்பளிக்க, தொண்டைப்புண் ஆறும். சளி பிரச்சனையும் சரியாகும்.

பிரசவத்துக்குப் பிறகு பெண்கள் தங்களுடைய உணவில் மஞ்சளைச் சற்றுக் கூடுதலாகச் சேர்த்துக்கொள்வது நன்று. கர்ப்ப காலத்தில் வயிற்றில் ஏற்பட்ட தளர்ச்சி குறைந்து, வயிறு இறுக உதவுகிறது.



மஞ்சளை இடித்து தூளாக்கி, தூளை நீரில் இட்டு ஊற வைத்துஇ காய்ச்சி, வடிகட்டி குடித்தால் காய்ச்சல் மற்றும் நாக்குச் சுவையின்மை குணமாகும்.

நம் அன்றாட உணவில் ஏதாவதொரு வகையில் மஞ்சளைச் சேர்த்துக்கொண்டால், ரத்தச்சோகை பிரச்னையே ஏற்படாது.

புதிதாகப் பறிக்கப்பட்ட மஞ்சளில் விட்டமின் சி உள்ளது. மஞ்சளில் பொட்டாசியம் இருப்பதினால் ரத்த அழுத்தம் மற்றும் இதய துடிப்பைக் கட்டுப்படுத்தும். தன்மை கொண்டது. மஞ்சளில் தாதுப் பொருட்களான மாங்கனிஸ்இபொட்டாசியம்இ இரும்பு, கல்சியம். துத்தநாகம். தாமிரம்இ மெக்னீசியம், போன்றவை அடங்கியுள்ளன.

மஞ்சள் தூளுடன் உப்பும் எலுமிச்சை சாறும் சேர்த்துப் பூசினால் புண், சுளுக்கு, உரசல் காயங்கள், மூட்டு வலி குணமாகும். பெருங்காய தூளையும் மஞ்சள் தூளையும் நீரில் கலந்து கொதிக்க வைத்து வேது பிடித்தால் ஒற்றைத் தலைவலி குணமாகும்.

கெட்ட கொழுப்புக்களைக் கட்டுப்படுத்தும் எதிர் பொருட்கள் நார்ச் சத்துக்கள் அதிகமாக உள்ல இதில் நியாசின், நிபோபிளவின். பைரிடாக்சின். சோலைனுள்ளிட்ட பல முக்கிய வேதியல் பொருட்கள் மஞ்சளில் அடங்கி உள்ளன.

மூக்கடைப்பு ஏற்பட்டால் மஞ்சளைச் சுட்டு அதன் புகையை நுகர்ந்தால் மூக்கடைப்பு குணமாக்கும். கஸ்தூரி மஞ்சள் சாதாரண மஞ்சளை விடச் சற்று மணம் அதிகமுள்ளது. தோல் நோய்களைப் போக்கும் தன்மையைப் பெற்றது.

விரலி மஞ்சள்தான் சமையலறையின் முதற்பொருள். இந்த மஞ்சளுக்குக் கிருமிகளை அழிக்கும் சக்தி இருக்கிறது. வாசற்படிகளில் மஞ்சள் பூசுவதற்கும்இ வீடு முழுவதும் மஞ்சள் கரைத்துத் தெளிப்பதற்கும்இ இந்த மஞ்சளில் அதிக கிருமி நாசினி இருப்பதே காரணம். மூக்கடைப்பு ஏற்பட்ட வர்கள், மூர்ச்சை போட்டு விழுந்தவர்களுக்கு மஞ்சளை சுட்டு அந்தப் புகை யை மூக்கில் காட்டுவார்கள். இதனால் தெளிவு ஏற்படும். வேனல் கட்டி, விரல் சுற்றி, அடிப்பட்ட வீக்கம் இவை களுக்கு மஞ்சளை அரைத்து மாவுடன் கலந்து கிளறிச் சூடாக அடிபட்ட இடங்களில் பத்துப் போட்டால் குணம் உண்டாகும். மஞ்சளையும் துணிக்குப் போடும் சோப்பையும் கலந்து கட்டிகளுக்குப் பூசினால் கட்டிகள் உடைந்துவிடும். மஞ்சளையும் வேப்ப இலை களையும் அரைத்து அம்மை நோய் வந்த வர்களுக்குத் தேய்த்து தலைக்கு நீராட்டப் பயன்படுத்துவார்கள். அம்மை நோய் வந்தவர்களைச் சுற்றி மஞ்சள் நீரைத் தெளிப்பதால் நோய் பரவாமல் தடுக்கலாம். மது வகைகள், பழச்சாறு போன்றவற்றிலும் மஞ்சள் சேர்க்கப்படுகிறது. இது பசியைத் தூண்டுவதோடு செரிமானத்திற்கும் உதவும் மருத்துவ குணம் கொண்டது. மேலும் உடலுரம் தரும். ரத்தத்தை சுத்தப்படுத்தும், குடற்பூச்சிகளைக் கொல்லும். நீரிழிவு மற்றும் தொழுநோயைக் கட்டுப்படுத்திக் குறைத்திடும். சரும நோய்களைப் போக்கக்கூடிய சக்தி மஞ்சளுக்கு அதிகம் உண்டு. மஞ்சள் கரிப்பொடியை பற்பொடியாய் உபயோகித்தால் பல் நோய்கள் குணமாகும். மஞ்சளின் சத்து எண் ணெய் உட்கொண்டால் கல்லீரலில் பித்தநீர் சுரப் பதையும் கட்டியாவதையும் குணப்படுத்திவிடும்.

## மஞ்சளின் வகைகள்:

மஞ்சள் கிழங்கில் மூன்று வகை அதிக பயன்பாட்டில் உள்ளது. முதல் வகை முகத்திற்குப் போடும் மஞ்சள் என்பார்கள். இதை முட்டா மஞ்சள் என்பார்கள். இது உருண்டையாக இருக்கும். இது முகத்தில் வளர்ந்துள்ள முடியை மேலும் வளராமல் தடுத்து மென்மையாக்குகிறது. சருமத்திற்கு ஒருவித மினுமினுப்பைத் தருகிறது. வசீகரத்தைத் தருகிறது. மிகவும் மங்களகரமானது.

இரண்டாம் வகை கஸ்தூரி மஞ்சள். வில்லை வில்லையாகத் தட்டையாக நிறைய வாசனையோடிருக்கும். ஆனால் இதனை சருமத்தில் பூசினால் நிறத்தைத் தராது. ஆனால் நல்ல மருத்துவ குணம் கொண்டது. இதனை வாசனைப் பொடிகளிலும்இ வாசனைத் தைலங்களிலும் சேர்த்து வருகிறார்கள்.

மூன்றாவது வகை நீட்ட நீட்டமாக இருக்கும். இதற்கு விரளி மஞ்சள் என்ற பெயர். கறி மஞ்சள் என்றும் இதனை அழைப்பார்கள். இதைத்தான் நாம் சமையலுக்குப் பயன்படுத்துகிறோம்.

அழகு, ஆன்மிகம், ஆரோக்கியம் ஆகிய மகத்துவம் கொண்ட மஞ்சளை நாம் பயன்படுத்தி சிறப்போம்.




# சதொச பொருட்கொள்வனவு எமக்கு இன்னும் எட்டாக்கனி - பட்டிருப்புத் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பு

நாட்டின் அரசாங்கத்தினால் அவ்வப்போது நாட்டு மக்களுக்காக அமுல்படுத்தப்படும் உத்தரவாத விலைக்கு நாங்களும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகளும், அரச உயர் அதிகாரிகளும், உறுதி செய்து தரவேண்டும், நகர் புறங்களிலுள்ள மக்கள் அரச சலுகை விலைகளை அரச பொது வர்த்தக நிலையங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளும் இந்நிலையில் கிராமப்புற மக்களாக எமக்கு அது இன்னுவரை எட்டாக்கனியாகவே அமைந்துள்ளது. இது தொடர்பில் மக்களாகிய நாம் நேரடியாகத் தெரிவித்திருந்தும், அவர்களும் இவ்விடையம் குறித்து சம்மந்தப்பட்டவர்கள் நன்கறிந்திருந்தும், அதனை அவர்கள் கண்டும் காணாததுபோல் செயற்படுவதானது மிகுந்த வேதனையளிக்கின்றது. என மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்புத் தொகுதிவாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நாலாபாகமும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சதொச விற்பனை நிலையத்தின் மூலம் மக்களுக்கு அரச உத்தரவாத மற்றும் நியாய விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமை வரவேற்கத்தக்கதாகும். ஆனாலும் இவ்வாறான வரப்பிரசாதங்களும், சலுகைகளும், கிராமப்புற மக்களுக்கு இன்னுவரை எட்டாக்கனியாகவே அமைந்துள்ளன.

இந்நிலையில் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மக்கள் சதொச விற்பனை நிலையம் தொடர்பில் அறிமுகமில்லாது இருந்த நிலையில் கடந்த காலத்தில் இருந்த அரசாங்கத்தினால் பட்டிருப்புத் தொகுதியில் அமைந்துள்ள களுவாஞ்சிகுடியிலும், கொக்கட்டிச்சோலையிலும், தலா ஒவ்வொரு சதொச விற்பனை நிலையங்கள் கடந்த 2016.02.28 அன்று அப்போதைய கைத்தொழில் மற்றும்

வணிக அமைச்சராக இருந்த றிசாட் பதியுதீன் தலைமையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டிருந்தன. அன்றிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரைக்கும் அவை இயங்கி வந்தன.

## சதொச விற்பனை நிலையங்கள் திடீரென நிரந்தரமாக மூடப்பட்டன.

இது இவ்வாறு இருக்க களுவாஞ்சிகுடிலும், கொக்கட்டிச்சோலையிலும், இயங்கி வந்த அந்த அரசாங்க சதொச பல்பொருள் விற்பனை நிலையங்கள், கடந்த 04.04.2020 அன்று திடீரென நிரந்தரமாக மூடுவதாக அந்நிலையத்தினர் தெரிவிதுவிட்டு பொருட்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு சென்றிருந்தனர்.

பிரதேச மக்களின் வேண்டுகோளிற்கிணங்க கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த சதொச நிலையங்கள் கொண்டுவரப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. இதனால் பட்டிருப்புத் தொகுதியின் மக்கள் பலத்த நன்மைகளை அனுபவித்து வந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த நிலையில் இந்நிலையங்கள் திடீரென நிரந்தரமாக மூடப்பட்டு, லொறியில் அங்கிருந்த பொருட்கள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டன.

மேலதிகாரிகளின் உத்தரவுக்கமைய பொருட்களை ஏற்றியனுப்புவதாக அந்நிலையத்தின் நிருவாகத்தினர் அப்போது தெரிவித்திருந்தனர்.

அக்குறித்த சதொச நிலையங்கள் மூடப்படுவதாக அறிந்த அப்பகுதி மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், அவ்வவ்விடங்களுக்கு விஜயம் செய்து இது எமது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்ததோடு நிலமையினைக் கேட்டறிந்திருந்தனர்

பட்டிருப்புத் தொகுதி மக்களின் வரப்பிரசாதமாக இருந்து வந்த சதொச நிலையம் இக்கட்டான காலகட்டத்தில், திடீரென மூடப்பட்டமை மிகவும்



துரதிஸ்ட்டவசமானது. இதனை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும். அரச சலுகைகளை எமது பகுதி மக்களும் அனுபவிக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து அப்போதிருந்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்த போதிலும் அது இற்றைவரையில் தீர்க்கப்படாமையால், ஆட்சி மாறினாலும் செயற்பாடுகள் மாறாதுள்ளதாக மக்கள் அங்கலாக்கின்றனர்.

பட்டிருப்புத் தொகுதியில் குறித்த சதொச விற்பனை நிலையங்கள் திறந்து 4 வருடத்திற்குள் இவ்வாறாக மூடுவிழா செய்த அரச சதொச நிலையத்தை மீள இயங்க வைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளும். அரச அதிகாரிகளும், முயற்சித்தும் அது இன்றுவரை கைகூடாத நிலையாகவே இருந்து வருகின்றது.



மட்டக்களப்பில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு சதோச விற்பனை நிலையமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சதோச விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் முன்மொழிவுகளை அப்போதிருந்த அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களிடம் முன்வைக்கப்பட்டன.

எமது நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு இக்கட்டான சூழ்நிலையிலும் அரசாங்கத்தின் தலையீட்டினால் அனைத்து சதொச விற்பனை நிலையங்களும் திறக் கப்பட்டு அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுப்ப தற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்திருப்போர் தொடர்பில் சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பதுக்கி வைத்திருக்கும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அவற்றை மக் களுக்கு நியாயமான விலையில் அனைவருக்கும் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை சதோச விற்பனை நிலையங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

அக்காலத்திலிருந்த அர சாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை தடுப் பதற்காகவே சில வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்களை பதுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். பொருட் களை பதுக்குவோர் தொடர் பில் அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக முறைபாடுகள் கிடைக்கப்பெற்றன. அவர்கள் தொடர்பில் சட்டநடவடிக்கைகள் முன்னெடுத்து அவர்களின் அனைத்து பொருட்களும் அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றை அனைத்து சதோச விற்பனை நிலையங்களின் ஊடாகவும் மக்களுக்கு நியாயமான விலையில் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



இராஜாங்க அமைச்சர்களாகவும் இருந்து செயற்பட்டவர்கள்கூட இவ்வாறான சிறிய விடைங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. வெறுமமே ஊடக அறிக்கைகளையும், மக்களின் பிரச்சனைகளை அரசாங்கத்திற்கு எத்தி வைத் திருக்கின்றோம் எனும் தகவர்களையும்தான் அவ் வப்பொத வெளியிட்டு வந்திருந்தார்கள் மாறாக



அப்பகுதி மக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட இரண் டுக்கும் மேற்பட்ட சதோச விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. அவை திறந்த நிலையில் இருந்திருந்தால் மக்க ளுக்கு தேவையான அத்தியாவசிய பொருட் களை பெற்றுக்கொள் வதற்கு மிக இலகு வாக இருந்திருக்கும். எனினும் தற்போது தனது வேண்டுகோளின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சதோச விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் உற்பத்தி யாளர்களின் பொருட்களை சதோச விற்பனை நிலையங்களுக்கு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பல முன்மொழிவுகளை அப்போதிருந்த அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களிடம் தான் முன்வைத்திருந்ததாக க்காலகட்டத்திலேயே என இராஜங்க அமைச்சராக இருந்த சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்திருந்தார்.

அப்போதும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்த, அரசாங்கத்தில் அமைச்சர்களா கவும், தீர்க்கமான முடிவுகள் எவும் நடைபெறாமல் செயற்பாட்டிலிருந்த சேவைகள் அற்றுப்போன நிலையே காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்புத் தொகுதியில் மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப் பற்றுஇ மண்முனை மேற்மேற்குஇ ஆகிய 3 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன.

மண்முனை தென் எருவில் பற்றில் 45கிராம சேவையாளர்கள் பிரிவுகளில், 17177இற்கு மேற்பட்ட குடும்பங்களில் 63011மேற்பட்ட மக்களும், 44057இற்கு மேற்பட்ட வாக்காளர்களும் உள்ளனர்.

போரதீவுப் பற்று பிரதேசத்தில் 43கிராம சேவையாளர் பிரிவுகளில், 12884இற்கு மேற்பட்ட குடும்பங்களில், 46862இற்கு மேற்பட்ட மக்களும், 29161 இற்கு மேற்பட்ட வாக்காளர்களும், வசிக்கின்றனர்.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் 24 கிராம சேவையாளர் பிரிவுகளில், 6850இற்கு மேற்பட்ட குடும்பங்களில், 24913இற்கு மேற்பட்ட மக்களும், 18020இற்கு மேற்பட்ட வாக்காளர்களும்இ வாழ்கின்றார்கள்.

இவ்வாறு 3பெரும் பிரதேசங்களை உள்ளடக்கிய இப்பட்டிருப்புத் தனியாக தமிழ் மக்கள் மாத்திரம் வாழும் தொகுதியில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சதொச விற்பனை நிலையம் ஒன்றுகூட இதுவரையில் இன்மையானது அப்பகுதி மக்கள் அரச சலுகைகளைப் பெறும் விடையத்தில் தட்டிக்கழிக்கப் படுகின்றார்கள் என்றே கூறலாம்

14 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நகரில் மாத்திரம் ஒரு சதொச விற்பனை நிலையம் போதாது,

அரச உத்தரவாத விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குரிய உரிமையை கிராமப்புற மக்களும் அனுபவிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும், வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூடப்பட்ட பட்டிருப்பு, கொக்கட்டிச்சோலை உள்ளிட்ட சதொச விற்பனை நிலையங்களை மீளவும் இயங்கச் செய்ய வழிகோல வேண்டும்.

அரசாங்கத்தின் நிருணய விலையில் விற்பனை செய்யப்படும் சதொச விற்பனை நிலையங்களை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நகர் புறங்களில் நிறுவுவது தொடர்பில் நான் அக்கறை செலுத்தியுள்ளேன். குறிப்பாக இவ்விடையம் தொடர்பில் வர்த்தக வாணிப அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன்.

களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை, செங்கலடி போன்ற பல நகர் பிரதேசங்களில் சதொச விற்கனை நிலைங்கள் அமைக்கவுள்ளோம். இதுதொடர்பில் நான் பாராளுமன்றத்திலும் உரையாற்றியுள்ளேன். மிகவிரையில் இந்த சதொச விற்பனை நிலையங்களைத் திறைந்து மட்டக்களப்பு வாழ் மக்களும் அதில் நன்மை பெறக்கூடிய அளவிற்கு எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என பிரதேச அபிவிருத்திக்குழுக்களின் தலைவரும், தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரபுவின் கருத்திற்கிணங்க குறித்த சதொச விற்பனை நிலையம் விரையில் அமைக்கப்படும் என தெரியவருருகின்றது. எனினும் அது அமைத்துக் கொடுக்கப்பட்டு அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கின்றபோதுதான் அது நிலையான அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும்.

கடந்த காலத்திலிருந்த இராஜாங்க அமைச்சர் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டோரின் குறித்த விடையம் தொடர்பிலான முயற்சிகள் கைகூடாத்திருந்த நிலையில் தற்போது நாட்டைப் பொறுப்பேற்றிருக்கின்ற புதிய அரசாங்கமும், புதிய ஜனாதிபதியும் இப்பகுதி மக்களின் தேவைகள் அறிந்து பிரதேச செயலகங்கள் தோறும் குறைந்தததது தலா ஒவ்வொரு சதொச விற்பனை நிலையங்கள் அமையவேண்டும் என்பதற்கு அப்பால் ஆரம்பக்கட்டமாக பட்டிருப்புத் தொகுதிக்கு குறைந்தது ஒரு சதொச விற்பனை நிலையமாவது அமைத்துக் கொடுக்கப்படும் பட்சத்திலேயே அதன் பலாபலனை அப்பிரதேச மக்களும் அனுபவிப்பார்கள் அப்போதுதான் மக்கள் நிலையான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லவார்கள்.



*வ.சக்திவேல்*
*சமூக ஆய்வாளர்*



# வீட்டுத் தோட்டத்தைப் பாதுகாப்பது எப்படி?

— வழிகாட்டும் –தமிழர் பொருண்மியம்



**தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதி......**

**வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார்'**



'கடந்த சில தினங்களாக மழை பெய்தாலும், மீண்டும் வெயில் வெளுத்து தள்ளுகிறது. இந்த அதிக அளவிலான வெப்பத்தால் நமது உடல்நிலை மிகவும் மோசமடையும். அதே போலத்தான் மற்ற உயிரினங்களும் கோடை காலத்தில் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் வெப்பத்தில் இருந்து தற்காத்து கொள்வது நல்ல பலன்களைத் தரும். இந்த சமயத்தில் மனிதர்கள் மட்டுமல்ல தாவரங்களும் அதிக வெப்பநிலையால் பாதிக்கப்படுகின்றன. அதிலும் நாம் வீட்டில் வைத்திருக்கும் தோட்டங்களில் இருக்கும் செடிகள் மோசமாக பாதிக்கும். இதனை தடுக்க சில வழிமுறைகளை பின்பற்றுங்கள்.

வீட்டுத் தோட்டம் என்பது வீட்டில் உள்ளவருக்கு மன மகிழ்ச்சியை மட்டுமல்ல, நம் அந்தஸ்தையும் உயர்த்திக் காட்டும். தோட்டங்களைப் பராமரிப்பது என்பது தனிக் கலை. காலையில் எழுந்து செடி, கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது மட்டும் பராமரிப்பு அல்ல. செடிகள் காயாமலும் வதங்காமலும் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

பூச்சு தொற்று ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும். இதற்குப் பல வழிமுறைகள் உள்ளன.

## தொற்று தவிர்க்க..

'தோட்டத்தில் உள்ள செடிகளைக் குழந்தைகளைப் போலப் பராமரிக்க வேண்டும். அவற்றில் பூச்சி தொற்று ஏற்பட்டால் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கையை எடுத்து விட வேண்டும்.

குறிப்பாகப் பல வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் செம்பருத்திச் செடிகளில் 'மீலி பெக்' என்ற பஞ்சு பூச்சி தாக்குதல் இருக்கும். இது பார்ப்பதற்கு வெள்ளை பொடி போல இருக்கும். இப்பூச்சி தாக்குதலில் இருந்து இச்செடிகளைக் காக்க ரோகர் அல்லது மாலத்தியான் ரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துடன் வேப்ப எண்ணையைச் சரி சமமாக எடுத்துக் கொண்டு, ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து பூந்தூரலாய் ஸ்பிரே செய்ய வேண்டும்.

இந்தச் சிறிய ஸ்பிரே தோட்டப் பொருள்கள் விற்கப்படும் கடைகளில் கிடைக்கும். பொதுவாகக்

குளிர் காலத்தில் செடிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விட்டால் போதும். வாரம் ஒரு முறையேனும் செடியைச் சுற்றி அடி மண்ணைக் கொத்தி விட வேண்டும். மனிதனுக்கு நடைப்பயிற்சி போலக் கொத்திவிடுவதை வாரம் ஒரு முறை தொடர்ந்து செய்ய வேண்டும். இதனைச் செய்யாமல் தொடர்ந்து தண்ணீர் ஊற்றுவதால் பயன் ஒன்றும் இல்லை.

செடிகளைக் காக்கும் வேப்பம் இயற்கை பூச்சிக் கொல்லியான வேப்ப எண்ணையை மாதம் ஒரு முறை அனைத்து வகைச் செடிகளிலும் தெளிக்க வேண்டும். வேப்ப இலைகளைச் சேமித்து நன்கு காய வைத்துத் தூள் செய்துகொள்ள வேண்டும். இந்தத் தூளைச் செடி ஒன்றுக்கு ஒரு பிடி வீதம் செடியின் வேர் பகுதியில் போட்டு நன்கு கொத்திவிட வேண்டும். இதுவே அடி உரமாகவும் பூச்சிக் கொல்லியாகவும் செயல்படும்.

வளர்ந்த ஒரு வயது செடிகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை இயற்கை உரம் ஒரு பிடி போட வேண்டும். இரண்டு வயது செடிகளுக்கு இரண்டு மடங்கு உரம் தேவை. இதே போலத்தான் தொட்டிச் செடிகளுக்கும் உரமிட்டுப் பராமரிக்க வேண்டும். இதனால் செடிகளின் வளர்ச்சி சீராக இருக்கும். வீட்டுக்குள் செடிப் பராமரிப்பு வீட்டுக்குள் (இண்டோர் பிளாண்ட்) வளர்க்கப்படும் செடிகளுக்குக் குறைவாகவே தண்ணீர் விட வேண்டும்.

இச்செடிகளுக்குத் தண்ணீரை ஸ்பிரே செய்தால்கூடப் போதும். அதுகூட அச்செடிகளின் இலைகளில் உள்ளத் தூசியை நீக்குவதற்காகத்தான். வாரம் ஒரு முறை மிதமான சூரிய ஒளிபடுமாறு பால்கனியிலேயோ, வீட்டின் வெளியிலேயோ வைக்கலாம். இதற்கு முன் செடியின் அடி மண்ணைக் கிளறிக் கொத்தி விடவேண்டும். இதுவே தண்டுச் செடிகளாக இருந்தால், தண்டின் அடி பாகத்தில் மட்டுமே தண்ணீர் விட வேண்டும்.

இவற்றைப் பூச்சிகள் தாக்காமல் இருக்க வேப்ப எண்ணையை ஸ்பிரே செய்ய வேண்டும். மணி பிளாண்ட், வெற்றிலை, மிளகு, ஐபோமி, பிலோடாண்டிரன்ட் கோல்டு, பிலோடாண்டிரன்ட் செலம், கிரே ஐவி ஆகிய செடிகள் வீட்டிற்குள் வளரக் கூடியவை. மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றினால் வீட்டுத் தோட்டச் செடிகளும், வீட்டுக்குள் வளர்க்கப்படும் செடிகளும் எப்போதும் பொலிவாக இருக்கும் .

## வெப்பம் ஏற்படுத்தும் தாக்கம்

சில தோட்டத் தாவரங்கள் கோடை வெயிலை உறிஞ்சும்போது செழித்து வளரும். சதைப்பற்றுள்ள தாவரங்கள் மற்றும் கற்றாழை போன்ற தாவரங்கள் வெப்பத்திற்கு நன்கு பொருந்துகின்றன, மேலும் சூரியகாந்தி மற்றும் பான்சிகள் போன்ற கோடை மலர்களும் குறிப்பாக சூரியனை விரும்புகின்றன.

இருப்பினும், வீட்டிற்குள் வைக்கப்படும் தாவரங்களுக்கு அதிகப்படியான வெப்பம் தேவையில்லை. இந்த தாங்க முடியாத கோடை மாதங்களில் தொட்டிகளில் வளர்க்கப்படும் தாவரங்களை வீட்டிற்குள் பராமரிப்பது குறித்து அறிந்துக் கொள்ளுங்கள்.

## அதிக ஈரப்பதத்தை தக்க வைக்கவும்

அதிக ஈரப்பதத்தை விரும்பும் தாவரங்களுக்கு வெப்ப காலங்களில் அடிக்கடி நீரை தெளிக்க வேண்டும். சிறந்த ஈரப்பதத்தை உறுதி செய்வதற்காக நடவு செய்யும் தளத் தட்டில் கூழாங்கற்களை நிரப்பலாம். செடியை தனியாக வைக்கலாம் அல்லது செடிகளின் ஒரு தொகுப்பை ஒன்றாக இணைத்து நடுவில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைக்கலாம், இது அவற்றுக்கு ஈரப்பதமான மைக்ரோக்ளைமேட்டை உருவாக்குகிறது. இது அவை அனைத்திற்கும் சிறந்த ஈரப்பதத்தை உறுதி செய்யும்.

அதிகப்படியான வெயிலிலை தடுக்க வேண்டும்

வெப்பம் அதிகமாக இருந்தால் கோடைகாலத்தில் சில தாவரங்களுக்கு நிழல் கொடுத்து, கடுமையான வெயிலிலிருந்து பாதுகாக்க வேண்டும். தாவரங்கள் தெற்கு அல்லது மேற்கு நோக்கிய பால்கனியில் இருந்தால், அவை இலை எரிவதற்கு அதிக வாய்ப்புள்ளது. நேரடி சூரிய ஒளி ஒரு நாள் முழுவதும் படாத மூலைகளுக்கு அவற்றை நகர்த்தி, தினமும் காலையில் ஆழமாக தண்ணீர் ஊற்றவும்..... தொடரும்

'வீட்டுத் தோட்டம் செய்வதினோடு தற்சார் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளலாம்'




# 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் (VAT) திருத்தங்கள்

இணக்கத்தை அதிகரிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD), VAT சட்டத்தில் பாரிய மாற்றங்களை அறிமுகப்படுத்துகின்றது.

2025 ஆம் ஆண்டின் 04 ஆம் எண் பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம் ஏப்ரல் 11, 2025 அன்று சான்றளிக்கப்பட்டது. மேலும் திருத்தச் சட்டத்திலிருந்து 2002ம் ஆண்டின் 14 ஆம் எண் பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் செய்யப்பட்ட முக்கிய மாற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மின்னணு தளங்கள் மூலம் சேவைகளை வழங்குவதில் வெளிநாட்டு நபர்களுக்கு VAT வரி விதிப்பு.

இலங்கையில் உள்ள நபர்களுக்கு மின்னணு தளங்கள் மூலம் வெளிநாட்டு நபர்களால்



ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK), FCPA (Aust.)

வழங்கப்படும் சேவைகளுக்கு பெறுமதிசேர் (VAT) வரியானது அக்டோபர் 1, 2025 முதல் விதிக்கப்படும்.

இதனை எவ்வாறு பதிவு செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் இணக்கத்திற்கான நடைமுறைகள் உரிய நேரத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரினால் அறிவிக்கப்படும்.

'மின்னணு தளம்', 'நிலையான இடம்' மற்றும் 'குடியுரிமை பெறாத நபர்' ஆகிய சொற்களின் தெளிவான விளக்கங்கள் VAT சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை திட்டத்தை (SVAT) ஒழித்தல் & இடர் அடிப்படையிலான பணத்தைத் திரும்பப் பெறும் வழிமுறையை அறிமுகப் படுத்துதல்.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை திட்டம் அக்டோபர் 1, 2025 முதல் ரத்து செய்யப்பட்டு இடர் அடிப்படையிலான பணத்தைத் திரும்பப் பெறும் திட்டத்தால் மாற்றப்படும்.

வரி விதிக்கக்கூடிய காலத்திற்கு அல்லது VAT சட்டத்தின் பிரிவு 22(7)ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மூலோபாய மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது குறிப்பிட்ட திட்டங்களுக்கு

அவர்களின் மொத்த விநியோகங்களில் 50% ஐ விட அதிகமான பொருட்களைக் கொண்ட தகுதியுள்ள ஏற்றுமதியாளர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட நபர்களின் அதிகப்படியான உள்ளீட்டு வரி, VAT வருமான வரி சமர்ப்பிக்க வேண்டிய திகதியிலிருந்து 45 நாட்களுக்குள் பணம் திருப்பித் தரப்படும்.

மேலும் அது முறையான VAT வருமான வரி தாக்கல் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே திருப்பித் தரப்படும்.

இந்த புதிய இடர் அடிப்படையிலான பணத்தைத் திரும்பப் பெறும் திட்டத்தின் நிபந்தனைகள் உரிய நேரத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரினால் அறிவிக்கப்படும்.

இங்கே, “தகுதிவாய்ந்த ஏற்றுமதியாளர்” என்பது முந்தைய காலண்டர் ஆண்டில் இந்தச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட விநியோகங்களின் மதிப்பு, அதே காலகட்டத்தில் அந்த நபர் செய்த விநியோகங்களின் மொத்த மதிப்பில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமாக இருந்த பதிவுசெய்யப்பட்ட நபரைக் குறிக்கின்றது.

பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட பொருட்கள் (Zero Rated Supplies)

VAT சட்டத்தின் பிரிவு 7 இன் விதிகளின்படி (திருத்தப்பட்டபடி) பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல்கள் 1988ஆம் ஆண்டின் 30 ஆம் எண் வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற இலங்கையில் உள்ள ஒரு வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பணம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது,




அத்தகைய சேவைகளின் ஏற்றுமதி அல்லது விநியோகம் நடந்த வரி விதிக்கக்கூடிய காலத்தின் முடிவில் இருந்து ஆறு மாதங்களுக்குள் பெறப்பட வேண்டும்.

இருப்பினும், குறிப்பிட்ட ஆறு மாத காலத்திற்குள் இலங்கையில் உரிமம் பெற்ற வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பணம் பெறப்படாவிட்டால் அத்தகைய விநியோகங்களுக்குக் காரணமான எந்தவொரு உள்ளீட்டு வரியையும் கழிக்க அனுமதிக்காத தொடர்புடைய விதி, 2025 ஏப்ரல் 10 வரை மட்டுமே பொருந்தும்.

**வணிக இறக்குமதியாளர்கள்/ ஏற்றுமதியாளர்களுக்கான கட்டாய VAT பதிவு**

வணிக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் அனைத்து நபர்களும் வருவாய் வரம்புகள் அல்லது விலக்குகளைப் பொருட்படுத்தாமல் VAT சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

**விநியோகங்களின் மதிப்பு பூஜ்ஜியமாகக் கருதப்படும்:**

ஜனவரி 1, 2024 முதல் VAT நோக்கத்திற்காக பின்வரும் பொருட்களின் மதிப்பு பூஜ்ஜியமாகக் கருதப்படும்:

ஒரு முதலாளி தனது பணியாளருக்கு இலவசமாக உணவு, அல்லது மானிய விலையில் உணவு அல்லது போக்குவரத்து இலவசமாக, அல்லது மோட்டார் கோச்சைப் பயன்படுத்தி மானிய விலையில் சேவைகளை வழங்குதல்.

பதிவுசெய்யப்பட்ட நபராக ஒரு முதலாளி, உணவு மற்றும் போக்குவரத்து விநியோகத்தை அவுட்சோர்ஸ் செய்வதில் அவர் செலுத்தும் கட்டணங்களுக்கு உள்ளீட்டு வரி அனுமதிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வெளியே உள்ள மறுகாப்பீட்டாளரிடமிருந்து எந்தவொரு உள்ளூர் காப்பீட்டு நிறுவனத்தினாலும் வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட ஏதேனும் மறுகாப்பீட்டு கமிஷன் அல்லது ஏதேனும் இழப்பீடு.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அல்லது ஒரு மாகாண சபையின் பயன்படுத்தப்படாத அஞ்சல் மற்றும் வருவாய் முத்திரைகள், அத்தகைய முத்திரைகளின் முக மதிப்பு.

**VAT / பெறுமதி சேர் வரி விபரத்திரட்டுக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வது கட்டாயம்**

ஜூலை 1, 2025 முதல் அனைத்து VAT பதிவு

செய்யப்பட்ட நபர்களும் மின்னணு முறையில் பெறுமதி சேர் வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே கைமுறையாக தாக்கல் செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி விபரத்திரட்டுக்கள் அனுமதிக்கப்படும்.

"பதப்படுத்தப்படாத விவசாயப் பொருட்களுக்கு" பின்வரும் வரையறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"பதப்படுத்தப்படாத விவசாயப் பொருட்கள்" (Unprocessed Agricultural Products) என்பது நிலத்திலோ அல்லது பசுமை இல்லத்திலோ பயிரிடப்படும் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளைக் குறிக்கின்றது.

மேலும் விற்பனை நோக்கத்திற்காக சுத்தம் செய்தல், அளவு செய்தல், வரிசைப்படுத்துதல், தரப்படுத்துதல், வெட்டுதல் அல்லது குளிர்வித்தல் போன்ற ஆரம்ப செயலாக்க நடவடிக்கைகளுக்கு உட்பட்ட தயாரிப்புகளையும் உள்ளடக்கியது.

**முட்டைகளை வழங்குவதற்கான VAT விலக்கு நீக்கம்.**

18% நிலையான விகிதத்தில் VATக்கு உற்பட்டது, 2023 ஆம் ஆண்டு எண். 32 ஆம் திகதி மதிப்பு கூட்டப்பட்ட வரி (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட VAT சட்டத்தின் விதிகளின்படி, ஜனவரி 1, 2024 முதல் அமுலுக்கு வருகின்றது.

முட்டைகளை வழங்குவதற்கான VAT பொறுப்புடன் மேற்கண்ட வரையறைக்கு எந்த தொடர்பும் இல்லை.

புதிய விலக்குகள் (ஏப்ரல் 11, 2025 முதல் அமலுக்கு வரும்)

மின்சார உற்பத்திக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட வேண்டிய இரசாயன நாப்தாவின் விநியோகம் அல்லது இறக்குமதி;

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் புதிய பாலில் இருந்து தயாரிக்கப்படும் திரவ பால் மற்றும் தயிர் வழங்கல் (supply of liquid milk and yoghurt).

இந்த விலக்குக்கு தகுதி பெற திரவ பால் அல்லது தயிரில் குறைந்தபட்சம் 50% (மொத்த உள்ளடக்கத்தின் அடிப்படையில்) உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் புதிய பால் இருக்க வேண்டும்.

**விலக்குகளை நீக்குதல் (ஏப்ரல் 11, 2025 முதல் அமுலுக்கு வருகின்றது)**

தனிப்பயன் நோக்கங்களுக்காக குறிப்பிட்ட இணக்கமான பொருட்கள் விளக்கம் மற்றும் குறியீட்டு முறை எண்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட விமான இயந்திரங்கள் அல்லது விமான உதிரி பாகங்களை இறக்குமதி செய்தல்.

2025 ஏப்ரல் 11ஆம் திகதி அமுக்கு வந்த பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் (VAT Act) மேற்கொள்ளப்பட்ட இத்தகைய மாற்றங்கள் இலங்கையின் வரிவிதி மற்றும் நிர்வாக அமைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகின்றன.

மின்னணு தளங்களில் சேவைகள் வழங்கும் வெளிநாட்டு நபர்களையும் வரி வலையில் கொண்டு வருவது, SVAT திட்டத்தை ஒழித்து இடர் அடிப்படையிலான திருப்பிச் செலுத்தும் முறைமையை அறிமுகப்படுத்துவது, மற்றும் கட்டாய மின்னணு தாக்கல் போன்ற பல புதிய அம்சங்கள், நவீன வரி நிர்வாகத்தின் தேவைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பூஜ்ஜிய மதிப்பீடு, புதிய விலக்குகள் மற்றும் விலக்கு நீக்கங்கள் வரிவிதி சட்டத்தில் தெளிவையும் ஒழுங்கையும் ஏற்படுத்துகின்றன. இவை அனைத்தும், வரிவிதி முறையில் வெளிப்படைத்தன்மை, சிறந்த இணக்கம், மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கின்றன.

இது வெறும் சட்ட திருத்தமாக மட்டுமல்ல. பதினெட்டுப் புள்ளிகள் மூலம் பரந்த பரப்பளவில் குறியீடாக நவீன வரிவிதி மற்றும் நிர்வாகக் கொள்கைகள் நோக்கி இலங்கை எடுத்து வைத்திருக்கும் புரட்சிகரமான அடியெடுத்து வைக்கும் முயற்சியாகும். வரி செலுத்துவோருக்கு இது ஒன்றிலிருந்து மேம்பட்ட ஒழுங்கு, நம்பிக்கை மற்றும் கணக்குபடுத்தலுடன் கூடிய ஒரு புதிய வரிச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தகைய மேம்பாடுகள், எதிர்காலத்தில் அரசாங்கத்தின் வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலைத்துவைக்கும் வகையில், ஆக்கபூர்வமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





தமிழ்க்கவி
சாகித்திய எழுத்தாளர்

# பார்வை

## ‘திருநாவு செத்துப்போனானாம்’

‘ங... எப்ப,’ கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். என்றால் அவன் சாவதற்கு தயாரான மனிதன் இல்லை. எப்போதும் ஓடியாடி எதையாவது செய்து கொண்டிருந்தவன். ஆரோக்கியமான உடல் கொண்டவன். புள்ளைகுட்டிக்காரன். ஆனால் அவனுடைய மனைவியைப்பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. கணவனைக் கருதியிராமல் அவள் தன்னளவில் பல தொழிலும் செய்து பிள்ளைகளையும் பார்த்துக் கொண்டாள்.

நன்கு விடியாத பொழுதில். ஆஸ்பத்திரி வளாகத்துள் ‘இடியப்பம் இடியப்பம்’ என்று கூவிக்கொண்டு ஒவ்வொரு வோட்டாக ஓடி ஓடி இடியப்பம் விற்கும் இரண்டு சிறுவர்களை காணலாம். இடியப்பம் ஐந்து சதம்,

அத்துடன் சம்பல் இலவசமாக கொடுப்பார்கள். இவர்கள் இடியப்பக்காற தங்கம்மாவின் பிள்ளைகள் தான். இதை விற்றபின் இரண்டொரு கடைக்கும் இடியப்பம் போட்டபின் பாடசாலைக்கு ஓடிப்போவார்கள். பாடசாலையும் ஆஸ்பத்திரியும் பக்கம் பக்கமாக வீட்டின் அருகிலேயே இருந்தது.

தங்கமணி அதிகாலையில் அப்பத்துக்கான மாவை கரைத்து புளிக்கவைப்பாள். மாலையில் இந்த இரண்டு சிறுவர்களும் இதே வைத்தியசாலைக்குள் அந்த அபபங்களை விற்பார்கள். தந்தை திருநாவு என சுருக்கமாக அழைக்கப்படும் திருநாவுக்கரசு அங்கிருந்து மூன்று நான்கு மைல் தூரத்தில் உள்ள ஒரு குடியேற்றக் கிராமத்தில் இருந்தார். அவருக்கு நாலு ஏக்கர் வயல்நிலமும், இரண்டு ஏக்கர் தோட்ட நிலமும் இருந்தது. அதைவிட சட்டமறுப்பில், இரண்டு ஏக்கர் புதிய காடு வெட்டி அதையும் புலவாக வைத்திருந்தார். எல்லாநிலமும் அமோகமாக விளைந்தது. தங்கமணி எப்போதாவது இங்கே வந்து கணவனுடன் தங்கியிருந்துவிட்டு போவாள்.

காலம் செல்லச்செல்ல பொடியள் வளந்து வர இந்த இடியப்பம் விற்பதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. இடியப்பக்காறத் தங்கமணி, இடியப்பக்காறப் பொடியள் என இவர்களுடைய பெயர் நிலைக்கத் தொடங்கிய போது எச்சரிக்கை அடைந்து பெரியவன் ரெயில் ரோட்டுப் போடுற மாட்டின் ஐயாவுடன் வேலைக்குப் போனான். மாசம் ஏதோ கொஞ்சம் பணம் கொடுத்தார். காலப்போக்கில் அந்த வேலையை அரசாங்க வேலையாக மாற்றியபோது அதில் வேலை செய்து கொண்டிருந்த ஐந்தாம் ஆண்டுவரை படித்தவர்களுக்கு வேலை நிரந்தரமாக்கப்பட்டது. அப்ப முதல் இடியப்பம் விற்ற பையன் இப்போது அரசாங்க ஊழியன் ஆனான்.

இந்த வீதி வேலைகள் செய்பவர்கள் தினமும் வீட்டுக்கு செல்ல முடியாது எங்கே வேலை நடக்கிறதோ அங்கேயே ஒரு டென்ட் கொட்டகை போட்டு அங்கேயே கிடைப்பதை சமைத்து உண்டு உறங்கி வேலை செய்வார்கள். மாதமுடிவில் ஒரு கொழுத்த விடுமுறை கிடைக்கும். அவனது வாழ்க்கையில் ஒரு கெட்டசகவாசம் அவனை குடிகாரனாக மாற்றியிருந்தது.

ஆனாலும் ஒரு பெண் அவனை காதலித்து பெற்றவர்கள் சம்மதத்துடன் கல்யாணம் செய்து கொண்டாலும். காதலித்தது அவர்களது குடும்ப முறைப்படி, 'சாவான பாவம்.' எனவே அவனை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். வந்தவள் திறமைசாலி அவள் படித்துமிருந்தாள் எனவே குடிகாரக் கணவனின் மனம் நோகாமல் அவனது வேலையிலிருந்து அவனை விலகச் செய்தாள். அப்படியே தனது சீதனக்காணியிலும்,



குத்தகைக்கு நிலமெடுத்தும் விவசாயம் பார்த்தாள். வீட்டு நிர்வாகத்தை கையிலெடுத்தாள். எப்பவும் மயக்கத்திலேயே கிடந்தான் புருஷன். திருநாவு தன் மனைவியை ஒருபோதும் தட்டிக்கேட்டவன் அல்ல. அவள் தன்னட்டவாரம் ஏதோ செய்து உழைக்கிறாள். அதை கெடுக்கக்கூடாது என்று நினைத்தான் தங்கமணியைப்பற்றி தவறான கதையை அவனிடம் கொண்டுவந்து சேர்த்தவர்களும் உண்டு.

திருநாவு எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுவிட்டு சொல்வதாவது. 'அவள் என் மனைவிதான் ஆனால் அவளுடைய சிந்தனை அவளுடையதுதானே. அவள் என்னுடைய உடமைப்பொருள் அல்ல, சுதந்திரமாக இருப்பது அவளுடைய உரிமை' என்பான். ஆனால் அவள் அவனுக்கென்றேதான் பிள்ளைகளைப் பெற்றாள். திருநாவு நன்றாக ஓடியாடித்திரிந்தவன்தான் திடீரென்று வந்த சாவு ஊரையே அசைத்தது. திருநாவு மனைவியின் பெயருக்கோ பிள்ளைகளின் பெயருக்கோ எந்த காணியையும் எழுதி வைக்கவில்லை. பிள்ளைகள் செத்தவீட்டை செய்து விட்டு அவரவர் குடும்பத்துடன் இணைந்து கொண்டார்கள்.

இப்போதுதான் இரண்டாவது மகன் தந்தை யுடன் விவசாய முயற்சிகளில் துணை நின்றவன் இன்னும் திருமணம் செய்யாதநிலையில் முழு நிலத்தினது ஆட்சியையும் வைத்துக் கொண்டான் அவனே அனைத்தையும் வைத்துக்கொண்டதை மற்றவர்கள் பொருட்படுத்தவில்லை ஆனால் இன்னும் விவாகமாகாத ஒரு தங்கை இருந்தாள் அவளையும் அவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான்.

அவளும் இருபத்தைந்து வயதையும் கடந்து போக காத்திருந்தாள். ஆனால் அவன் தான் காதலித்து ஒருபெண்ணை கல்யாணம் செய்து வீட்டுக்கு அழைத்து வந்தான் கொத்துச்சாவி அவளுடைய கைகளுக்கு மாறியது. இந்தப்பெண்ணுக்கான அடக்குமுறைகள் தொடங்கவே அவள் திருமணமான தன் அக்காளுடன் ஒட்டிக்கொண்டாள். அவள் இவளுக்கு திருமணம் செய்து வைக்க முயன்றாள். இப்போது அந்த பெண்ணுக்குரிய காணி கொடுக்க வேண்டுமல்லவா? தந்தை அவளுக்கு நகைகளையும் செய்து வைத்திருந்தார். அதையும் இப்போது வீட்டுக்கு வந்த மருமகள் போட்டிருந்தாள்.

இப்போதுதான் சொத்துகளை பல வருடங்களாக வைத்திருந்த தம்பி தாயின் மறைவுக்குப் பின்னும், அவனே வைத்திருக்கிறான் என்பது உறைத்தது. அவள் ஒதுக்கி விடப்பட்டிருந்த குடிகாரத்தமையனிடம் போனாள்.


'அண்ணை பிலவுக்காணிய சுந்தரிக்கு குடுக்கச் சொல்லு அவள் எங்க இருக்கிறது' என்று கேட்டாள். இவர்கள் நியாயமாக தம்பியிடம் பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தார்கள். அவன் அதில் பாதியை மட்டும் தருவதாக சொன்னான் மேலும், 'நகைகளை அடைவு வச்சிருந்தார் அதெல்லாம் நான்தான் மீட்டது அதை கேக்காதீங்க' என்றும் தடை போட்டான். இப்போது தான் சட்டம் உதவிக்கு வந்தது.

குடிகாறனாக ஒதுங்கியிருந்த அண்ணனுக்கே சொத்துகளை பங்கு போடும் உரிமை இருக்கிறது. சொல்லப்போனால் இன்று எல்லோரும் நல்ல தொழிலில் நலமாக வாழ்ந்தார்கள். எனவே முழுக்காணிகளும் சொத்துகளும் ஒன்றிணைக்கப்பட்டு சீதனம் வாங்கிக்கொண்டு போன திருமணமான மகளைத்தவிர ஏனைய நால்வருக்கும் சமமாக பங்கிட்டான்

மூத்தவன். ஒரு நிலத்தை கொடுக்க மறுத்த தம்பி தனக்கிருந்த பெரியளவு நிலத்தை சகோதரர்களுக்கு பங்கிட வேண்டியதாயிற்று. தானாக கொடுத்தால் ஒரு புலவோடு போக வேண்டிய காணி புலவோடு வயலிலும், முக்காற்பங்கு வயலை சகோதரர்களுக்கு வழங்க வேண்டியதாயிற்று. எழுதப்படாத சொத்துகளை இருக்கு பிள்ளைகளில் மூத்த ஆண்மகனாலேயே பங்கிட்டு வழங்க வேண்டும்.

காரணம் அந்த குடும்பத்தை தாங்கி நிற்பவன் அவன்தான் என்பதால்தான். இன்று அப்படி எத்தனை மூத்த அண்ணன்கள் தன் சகோதரர்களை கருதி வளர்க்கிறான். சட்டம் காலாவதியாக்கப்பட வேண்டும் ■

ஓர் பூசணிக்காயை உடைக்காமலே அதில் எத்தனை விதைகள் இருக்கிறது என்பதையும், ஓர் பலாப்பழத்தைப் பிளக்காமல் அதன் உள்ளிருக்கும் சுளையின் எண்ணிக்கையையும் உங்களால் கூற முடியுமா? தமிழன்_படைத்த_கணிதம் .




## கணக்கதிகாரம்_ நூலின்_சிறப்பு:

ஓர் பூசணிக்காயை உடைக்காமலே அதில் எத்தனை விதை இருக்கிறது என்பதை உங்களால் கூற முடியுமா?

முடியும் என்கிறது நம் தமிழ் செய்யுள்.

"கணக்கதிகாரம்" கொறுக்கையூரைச் சேர்ந்த காரி_நாயனார் என்பவர் எழுதிய ஒரு தமிழ்க் கணித நூல்

**"கீற்றெண்ணி முத்தித்துத்**
**கழாறினால் மாறி**
**வேற்றையஞ்சு தன்னில்**
**மிகப்பெருக்கிப் பார்த்ததிலேபாதி**
**தள்ளி மூன்றிற் பகிர விதையாகும்**
**பூசணிக்காய் தோறும் புகல்"**

ஒரு பூசணிக்காயின் கீற்றுகளை எண்ணிக்கொண்டு அதை மூன்று, ஆறு, ஐந்து இவற்றால் பெருக்கி வரும் விடையை பாதியாக்கி மீண்டும் மூன்றால் பெருக்கினால் வருவது விதைகளின் எண்ணிக்கையாகும்.

ஒரு பூசணியில் உள்ள கீற்றுகளின் எண்ணிக்கையை "அ" என்க.

பாடலின் படி அதை 3,6,5 ஆகியவற்றால் பெருக்க கிடைப்பது "90அ" ஆகும். அதை பாதியாக்கினால் கிடைப்பது "45அ" ஆகும். அதை மீண்டும் மூன்றால் பெருக்க கிடைப்பது "135அ" ஆகும்.

ஒரு பூசணியில் உள்ள கீற்றுகளின் எண்ணிக்கையை அ=6 ஆறு எனக்கொண்டால் (135 * 6 = 810) 135 ஐ ஆறால் பெருக்க கிடைப்பது 810 ஆகும். எனவே பூசணியில் உள்ள விதைகளின் எண் ணிக்கை 810 ஆகும்.

ஓர் பலாப்பழத்தை பிளக்காமல் அதில் எத்தனை சுளைகள் இருக்கிறது என்பதை உங்களால் கூற முடியுமா ?

சங்க காலத்திலேயே எழுதப்பட்ட கணக்கதிகாரம் என்ற நூலில் பலாப்பழத்தைப் பிளக்காமல் அதன் உள்ளிருக்கும் சுளையின் எண்ணிக்கையை அறிந்துகொள்ளும் வழிமுறை மிக எளிமையாகக் கூறப்பட்டுள்ளது.

**"பலாவின் சுளையறிய**
**வேண்டுதிலேல் ஆல்கு**
**சிறுமுள்ளுக் காம்பரு எண்ணி -**
**வருவதை**
**ஆறிற் பெருக்கியே**
**ஐந்தனுக் கீந்திடவே**
**வேறெண்ண வேண்டாஞ் சுளை."**

**கணக்கதிகாரம்_ விளக்கம் :**

பலாப்பழத்தின் காம்புக்கு அருகில் உள்ள சிறு முட்களை எண்ணி ஆறாலே பெருக்கி ஐந்தால் வகுக்க பலாப்பழத்தினுள் உள்ள சுளைகளின் எண்ணிக்கையை அறியலாம்.




நம் முன்னோர்களின் அறிவியல் படைப்புகளில் இதுவும் ஒன்று எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும், அவன் புகழ் என்றும் வாழ்க வாழ்க; தமிழ் வெல்க

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

காலக்கவிதை



# மண்வாசம்...

பூவரசம் கதியால்கள் பதியம்போட்ட
வடலிமட்டை வேலியொன்றின் இடுக்குகளிடையே நான்
தவறவிட்ட - பசுமையான நாட்களைக்
கணக்கெடுத்துக்கொண்டிருக்கிறேன்...

எந்த மின்விசிறிகளாலும் தரமுடியாத
வயல்க்காற்றின் குளிர்ச்சியில் கண்ணயரும் போது...
இன்றைக்கும் கிட்டிப்புள் விளையாடி
குட்டத்து குளத்தில் குளித்து
மணியப்புவின் மாங்காயை பறித்துப் பகிர்ந்துண்ணும்
மழலைகளின் முன்
நான் எங்கேயோ தோற்றுப்போகிறேன்...

வரப்புகளில் குந்தியிருந்து
ஊர்க்கதைகபறையும் - என் அப்புவின்
சேட்டில்லாத மேனியில்...
கட்டியின் கள்ளுக்கொட்டிலில்
குட்டத்துகிணத்தில் தண்ணியள்ளவரும்
கட்டழகிகளின் ஒய்யாரத் தாவணியில்...
ஏர்பூட்டி எருதுகளை தட்டிவிடும் என் மச்சானில்
பாத்தியிட்ட பனங்கொட்டைப்பூரானில்
போன வருசத்துப் புளுக்கொடியில்...
இப்படி இன்னும் மிச்சமிருக்கிறது
என் மண் வாசம்!

ஆடிக்காத்தோடு மல்லுக்கட்டும் என் மச்சாளின்
மாராப்புச்சேலைக்கு மட்டும் தான்
நாகரீகங்கள் பற்றி நன்குதெரியும்...
அரசடிப்பிள்ளையாரின் அர்ச்சனையில்...
அவித்த மோதகத்தில்
அக்காள் வீட்டு அன்னதானத்தில்...
வைரவர் திருவிழாவில் வரக்காணா மச்சானை கண்களால்
தேடும் கனிமொழியின் பரிதவிப்பில்...
மாமன்மகளுக்காய் கறுப்பாட்டை நேந்துவிட்ட
கண்ணனின் காதலில்...
திளைத்துக் கிடக்கிறது என் மண் வாசம்!

இந்தப்போக விதைப்போட
தங்கச்சி கலியாணத்தை
முற்றாக்க முனையும் தமயனின் பாசத்தில்...
அஞ்சிருவாய் நேந்து கட்டிவிடும்
அப்பத்தா நேசத்தில்...
பனிக்காச்சல் வந்தாலும் பதறிப்போய்
பாக்கவரும் உறவுகளில்...
பூனைக்குட்டிக்காய் சாப்பாட்டில் மீதம் வைக்கும்
குட்டி நாயின் நட்பில்
இப்படி எல்லாவற்றிலும் மீதமிருக்குமென்
மண் வாசத்தின் பெருமைகளை என்மகளுக்கேனும்
கொடுக்காமலிருப்பேனோ???

பூநகர் ஆராதனா